விஞ்ஞானத்தில் உயாதர் சான்றிதழ்	776		
வனவிலங்கு பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவத்தில் உயர்தர சான்றிதழ்	69		
இயற்கை வளங்கள் மற்றும் உயிரியல் சுற்றுலாவியலில் தகைமைச் சான்றிதழ்	56		
ஆய்வுகூடத் தொழில்நுட்பத்தில் தகைமைச் சான்றிதழ்	36		
சுற்றாடல் விஞ்ஞானத்தில் தகைமைச் சான்றிதழ்	7		
விஞ்ஞானமாணி	3506		
விஞ்ஞானமாணி/சிறப்புப் பட்டம்	11		
சுற்றாடல் கற்கைகள் முதுமாணி	129		
மருத்துவ ஒட்டுண்ணியியல் மற்றும் பிரயோகபூச்சியியலில் முதுமாணி	16		
முதுதத்துவமாணி/தத்துவவியல் கலாநிதி	14		

அட்டவணை 26 : தனிநபர் நிகழ்ச்சிதிட்டங்களில் மாணவர் உள்ளீர்ப்பு மற்றும் பணியாளர் – இயற்கை விஞ்ஞானங்கள்

4.6.4 புதிய கற்கை நெறிகள் / நிகழ்ச்சித் திட்டங்கள்

கற்கைநெறிகள் /நிகழ்ச்சிதிட்டங்கள்	மொழி மூலம்	மட்டம்
	-	-

***அட்டவணை 27: கற்கைநெறிகள் /நிகழ்ச்சிதிட்டங்கள்* - இயற்கை விஞ்ஞானங்கள்**

4.6.5 நிகழ்நிலையாக வழங்கப்படும் கற்கைசெநிகள்

கற்கைநெறி	கற்கைநெறித் தலைப்பு	மட்டம்	மொழி மூலம்
தாவரவியல் துறை			
BYU3301	கலங்களின் அமைப்பு மற்றும் தாவர உயிரியல் இரசாயனம்	3	ஆங்கிலம்
BOU1200 BYU3500	தாவரங்களின் பல்வகைமை	3	ஆங்கிலம்
FNU3200	விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தின் ஒழுங்குநெறிகள்	3	ஆங்கிலம்
BYU4300	தாவர உளவியல்	4	ஆங்கிலம்
BYU4301	பிறப்புரிமையியல் மற்றும் கூர்ப்பு	4	ஆங்கிலம்
BYU4302	உயர் தாவரங்கள் மற்றும் விலங்குகளின் அமைப்பு முறைமை	4	ஆங்கிலம்
BYU4303	நுண்ணுயிரியல் கொள்கைகள்	4	ஆங்கிலம்
BYU5300	சுற்றாடல் மற்றும் பிரயோக நுண்ணுயிரியல்	5	ஆங்கிலம்
BYU5301	தாவர நோயியல்	5	ஆங்கிலம்
BYU5304	மண்கள் மறறும் தாவர வளர்ச்சி	5	ஆங்கிலம்
BYU5306	தாவர இனப்பெருக்கம்	5	ஆங்கிலம்
BYU5308	உடனடி உற்பத்திகளின் அறுவடைக்கு பின்னரான தொழில்நுட்பம்	5	ஆங்கிலம்
BYU5609	தோட்டக்கலை	5	ஆங்கிலம்
BYU6302	உயிரியல் தொழில்நுட்பம்	6	ஆங்கிலம்
இரசாயனவியல் துறை			
CYE3200	இரசாயனவியல் மற்றும் உயிரியலுக்கான கணிதம்	3	ஆங்கிலம்
CYU3300	இரசாயனவியலுக்கான அடிப்படை கொள்கைகள்I	3	ஆங்கிலம்
CYU3302	அடிப்படை செயன்முறை இரசாயனம்	3	ஆங்கிலம்
LLU3261	சட்டத்தினை விளங்கிக் கொள்ளுதல்	3	ஆங்கிலம்
CYU4300	கனிம இரசாயனவியல்	4	ஆங்கிலம்
CYU4301	இரசாயனவியலின் எண்ணக்கருக்கள்	4	ஆங்கிலம்
CYU4302	செயன்முறை இரசாயனவியல்II	```	ஆங்கிலம்
CYU5300	கரிம இரசாயனவியல்	5	ஆங்கிலம்
CYU5301	நிறமாலையியல் எண்ணக்கருக்கள்	5	ஆங்கிலம்
CYU5303	கரிம இரசாயனவியல் II	5	ஆங்கிலம்
CYU5304	உயிர் அணுக்களின் இரசாயனம்	5	ஆங்கிலம்
CYU5306	உயிரியல் இரசாயனம்	5	ஆங்கிலம்
CYU5307	உணவு தொழிற்துறையின் இரசாயன அம்சங்கள்	5	ஆங்கிலம்
CYU5308	இரசாயன பகுப்பாய்வின் கருவிசார் முறையியல்	5	ஆங்கிலம்
CYU5309	சூழலியல் இரசாயனவியல்	5	ஆங்கிலம்
CYU5611	இரசாயனவியலில் ஆராய்ச்சி செயற்றிட்டம்	5	ஆங்கிலம்

இரசாயனவியல் துறை			
CYU5313	பல்படிம இரசாயனவியல்	5	ஆங்கிலம்
CYU5614	பல்படிம இரசாயனவியல்II	5	ஆங்கிலம்
CYU6608	இரசாயனவியலில் ஆராய்ச்சி செயற்றிட்டம்	6	ஆங்கிலம்
கணினி விஞ்ஞானத் துறை			
CSU3200	கணினி நிகழ்ச்சித் திட்டத்திற்கான அறிமுகம்	3	ஆங்கிலம்
CSU3301	தரவுத் தள வடிவமைப்பு மற்றும் அமுல்ப்படுத்துகை	3	ஆங்கிலம்
CSU3302	தரவுக்கட்டமைப்பு மற்றும் வழிமுறைகள்	3	ஆங்கிலம்
CSU4300/ CSU5315	செயற்பாட்டு முறைமைகள்	4	ஆங்கிலம்
CSU4301	பொருள் சார்ந்த நிகழ்ச்சித்திட்டம்	4	ஆங்கிலம்
CSU4302	முறைமை பகுப்பாய்வு மற்றும் மென்பொருள் பொறியியல்	4	ஆங்கிலம்
CSU4616	சீ ++ மற்றும் ஜாவா இனைப் பயன்படுத்திபொருள் சார்ந்த நிகழ்ச்சித்திட்டம்	4	ஆங்கிலம்
CSU5302	வலைத் தொழில்நுட்பங்கள்	5	ஆங்கிலம்
CSU5303	முகாமைத்துவ தகவல் முறைமைகள்	5	ஆங்கிலம்
CSU5305	கணினிக் கோட்பாடு	5	ஆங்கிலம்
CSU5306	எண்ணியல் மிண்ணனுவியல்	5	ஆங்கிலம்
CSU5307	தரவு தொடர்பாடல்	5	ஆங்கிலம்
CSU5308/ CSU5317	பகுப்பாய்வு நுண்ணறிவு	5	ஆங்கிலம்
CSU5309	தகவல் பாதுகாப்பு மற்றும் குறியாக்கவியல்	5	ஆங்கிலம்
கணிதத் துறை			
ADU3300	திசையன் அட்சர கணிதம்	3	ஆங்கிலம்
ADU3201	அடிப்படை புள்ளிவிபரவியல்	3	ஆங்கிலம்
ADU3302	வெறுபட்ட சமன்பாடுகள்	3	ஆங்கிலம்
PEU3202	திசையன் இடைவெளிகள்	3	ஆங்கிலம்
ADU4301	நியூட்டனின் இயக்கவியல் I	4	ஆங்கிலம்
ADU4302	திசையன் நுண்கணிதம்	4	ஆங்கிலம்
ADU4303	பிரயோக நேர்கோட்டுத் தன்மையான அட்சர கணிதம் மற்றும் வேறுபட்ட சமன்பாடுகள்	4	ஆங்கிலம்
ADU4319	விவசாயத்திற்கான புள்ளிவிபரவியல்	4	ஆங்கிலம்
ADU5300	நேர்கோட்டுத் தன்மையான நிகழ்ச்சித்திட்டம்	5	ஆங்கிலம்
ADU5301	தொடர்புப் போக்கு பகுப்பாய்வு I	5	ஆங்கிலம்
ADU5302	கணிதவியல் முறைமைகள்	5	ஆங்கிலம்
ADU5305	புள்ளிவிபரவியல் அனுமானம்	5	ஆங்கிலம்
ADU5308	வரைபடக்கோட்பாடு	5	ஆங்கிலம்
ADU5318	உயிரியல் புள்ளிவிபரவியல்	5	ஆங்கிலம்

கணிதத் துறை			
ADU5319	பரிசோதனைகளின் வடிவமைப்பு மற்றும் பகுப்பாய்வு	5	ஆங்கிலம்
ADU5320	MATLAB மென்பொருளுக்கான அறிமுகம்	5	ஆங்கிலம்
பௌதிகவியல் துறை			
FNU3201	தொடர்பாடல் திறன்கள்	3	ஆங்கிலம்
PHU3300	பொது மற்றும் வெப்ப பௌதீகவியல்	3	ஆங்கிலம்
PHU3301	அடிப்படை மின்காந்தவியல்	3	ஆங்கிலம்
PHU3202	பௌதீகவியலில் அலைகள்	3	ஆங்கிலம்
PHU4302	ஒளியியல்	4	ஆங்கிலம்
PHU4303	பௌதீகவியலுக்கான கணிதவியல் முறைமைகள்	4	ஆங்கிலம்
PHU5300	அணு மற்றும் துகள்பௌதீகவியல்	5	ஆங்கிலம்
PHU5301	செயன்முறைப் பௌதீகவியல்	5	ஆங்கிலம்
PHU5302	வளிமண்டலவியல் பௌதீகவியல்	5	ஆங்கிலம்
PHU5303	தரவு கையகப்படுத்தல் மற்றும் சமிக்ஞை செயன்முறைப்படுத்தல்	5	ஆங்கிலம்
PHU5305	புவியியல் அடிப்படைகள்	5	ஆங்கிலம்
PHU5306	பிரயோக புவியியல்	5	ஆங்கிலம்
PHU5308	புவிப் பௌதீகவியல் அடிப்படைகள்	5	ஆங்கிலம்
PHU5311	வான சாஸ்திரம்	5	ஆங்கிலம்
PHU5318	உயிரியல் மாணவர்களுக்கான மிண்ணனுவியல்	5	ஆங்கிலம்
விலங்கியல் துறை			
ZYU3500	விலங்கு வாழ்வு மற்றும் பல்வகைமை	3	ஆங்கிலம்
ZYU3301	உயிரியல் புவியியல்	3	ஆங்கிலம்
ZYU4300	மிருக வடிவம் மற்றும் தொழிற்பாடு	4	ஆங்கிலம்
ZYU4301	சூழலியல்	4	ஆங்கிலம்
ZYU4302	மிருக விருத்தி	4	ஆங்கிலம்
ZYU5300	நீரியல் உயிரியல்	5	ஆங்கிலம்
ZYU5301	மீன் உயிரியில் மற்றும் மீன்சார் முகாமைத்துவம்	5	ஆங்கிலம்
ZYU5302	உயிர்ப்பல்வகைமையின் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம்	5	ஆங்கிலம்
ZYU5304	ஒட்டுண்ணியியல்	5	ஆங்கிலம்
ZYU5305	மானிட உயிரியல்	5	ஆங்கிலம்
ZYU5306	பூச்சியியல்	5	ஆங்கிலம்
ZYU5307	முளையூட்டி உயிரியல்	5	ஆங்கிலம்
ZYU5309	உயிர்ப்படிமவியல்	5	ஆங்கிலம்
ZYU5313	ஆராய்ச்சி முறையியல்	5	ஆங்கிலம்
ZYU5312	விலங்கியல் கட்டுரை	5	ஆங்கிலம்
ZYC2304	செயற்றிட்ட கற்கை	2	ஆங்கிலம்
ZYC2306	விலங்குவாழ்வு முகாமைத்துவ விடயக் கற்கை	4	ஆங்கிலம்
ZYC2601	வனவாழ்க்கை உயிரியல்	4	ஆங்கிலம்

விலங்கியல் துறை			
ZYC2602	வனவாழ்க்கை சூழலியல்	4	ஆங்கிலம்
ZYC2603	வனவாழ்க்கை பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம்	4	ஆங்கிலம்
ZYC2605	வனவாழ்க்கை கற்கை நுட்பங்கள்	4	ஆங்கிலம்
ZYP8603	நோயெதிர்ப்பியல் மற்றும் மூலக்கூற்று உயிரியலுக்கான அறிமுகம்	8	ஆங்கிலம்
ZYP9304	புரவலன் ஒட்டுண்ணித் தொடர்பு	9	ஆங்கிலம்
ZYP9605	தொற்றுநோயியல் மற்றும் காற்றினால் பரவும் நோய்களைக் கட்டுப்படுத்தல்	9	ஆங்கிலம்
ZYEA314	ஆராய்ச்சி முறையியல் மற்றும் தொடர்பாடல் திறன்கள்	9	ஆங்கிலம்
ZYPA410	திசையன்கள் மற்றும் ஒட்டுண்ணியில் பாதுகாப்பு பொறிமுறை	9	ஆங்கிலம்

சி- சிங்களம் த- தமிழ் ஆ- ஆங்கிலம்

அட்வணை 28: நிகழ்நிலையாக வழங்கப்படும் கற்கைநெறிகள் – இயற்கை விஞ்ஞானங்கள்

பகுதி 5

ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள்

5.0. ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள்

5.1 ஆராய்ச்சி செயற்றிட்டம் / பத்திரங்கள்

பீடம்/நிலையம்	துறை	ஆய்வுச் செயற்றிட்டங்கள்	வெளியிட்ட பத்திரங்கள்	சமர்ப்பிக்கப்பட்ட பத்திரங்கள்
கல்வி	விசேடதேவைகள் கல்வி		01	01
	முன்பிள்ளை மற்றும் ஆரம்பக் கல்வி		07	05
	இரண்டாம் மற்றும் மூன்றாம்நிலைக் கல்வி	01	07	05
	கல்விசார் தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவம்	-	-	-
பொறியியல் தொழில்நுட்பம்	விவசாயம் மற்றும் பயிர்ச்செய்கைப் பொறியியல்		9	6
	குடிசார் பொறியியல்	03	34	25
	இலத்திரனியல் மற்றும் கணினிப்பொறியியல்	11	-	-
	கணிதம் மற்றும் பொறியியலின் மெய்யியல்	-	01	-
	இயந்திரப் பொறியியல்	1	12	12
	புடவை மற்றும் ஆடைத் தொழில்நுட்பம்	33	06	02
சுகாதார விஞ்ஞானங்கள்	அடிப்படைவிஞ்ஞானங்கள்	2	4	3
	மருந்தியல் ஆய்வுகூட விஞ்ஞானங்கள்	1	4	5
	தாதியியல்	4	4	26
	மருந்தகம்	1	3	06
	உளவியல் மற்றும் நிபுணத்துவ ஆலோசனை	1	4	06
மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள்	மொழிக்கற்கைகள்		01	13
	சட்டக் கற்கைகள்	02	03	14
	சமூகக் கற்கைகள்	-	01	12
	ஆங்கில மொழி கற்பித்தல்	-	-	-
முகாமைத்துவ கற்கைகள் பீடம்	மனித வள முகாமைத்துவம்	-	3	1
	சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்	-	5	12
	ஒழுங்கமைப்புசார் கற்கைகள்	-	4	3
	கணக்கீட்டுத் துறை	-	7	12
இயற்கை விஞ்ஞானங்கள்	தாவரவியல்	09	18	08
	இரசாயனவியல்	-	18	32
	கணினிவிஞ்ஞானம்	02	-	-
	கணிதம்	-	02	02
	பௌதீகவியல்	04	22	13
	விலங்கியல்	05	-	-
கல்வி தொழில்நுட்பம் மற்றும் ஊடக நிலையம்		-	08	03
பிராந்தியகல்விச் சேவைகள்		-	-	-
நூலகம்		-	05	-
சூழலியல் கற்கைகள் மற்றும் நிலைபேண் அபிவிருத்தி நிலையம்		01	03	01

அட்டவணை 29: ஆராய்ச்சி செயற்றிட்டங்கள் / பத்திரங்கள்

வெளியீடுகளின் விபரங்கள் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன.

5.2 புத்தகங்கள்/ காப்பாளர்கள்

பீடம் /நிலையம்	புத்தகத்தின் அத்தியாயங்கள்	பூரணப்படுத்திய புத்தகங்கள்	காப்புரிமை பதிப்பாளர்கள்
கல்வி	04	-	-
பொறியியல் தொழில்நுட்பம்	7	-	-
சுகாதார விஞ்ஞானங்கள்	-	-	-
மானிடவியல் மற்றும் சமூகவிஞ்ஞானங்கள்	04	01	-
முகாமைத்துவ கற்கைகள்	-	01	-
இயற்கை விஞ்ஞானங்கள்	06	-	01

அட்டவணை 30: புத்தகங்கள் /காப்புரிமையாளர்கள்

5.3 விருதுகள்

பீடம் /நிலையம்	பல்கலைக்கழக விருதுகள்	தேசிய விருதுகள்	சர்வதேச விருதுகள்
கல்வி	-	-	-
பொறியியல் தொழில்நுட்பம்	01	01	01
சுகாதார விஞ்ஞானங்கள்	-	01	01
மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள்	-	01	-
முகாமைத்துவ கற்கைகள்	-	-	-
இயற்கை விஞ்ஞானங்கள்	02	-	01
கல்வி தொழில்நுட்பம் மற்றும் ஊடகநிலையம்	-	-	-
பிராந்திய கல்விச் சேவைகள்	-	-	-

அட்டவணை 31: விருதுகள்

பகுதி 6 –
நிலையங்களும் அலகுகளும்

6.0. நிலையங்களும் அலகுகளும்


6.1 பிராந்திய கல்விச் சேவைகள்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பிரதான தூண்களில் ஒன்றாக பிராந்திய கல்விச் சேவைகள் கருதப்படுகின்றது.

ஏனைய பெரும்பாலான பல்கலைக்கழங்கள் மத்தியில் இருந்து இயக்கப்படும் அதேவேளை, முதன்மை திறந்த தொலைக்கல்வி பல்கலைக்கழகமாக மத்திய வளாகத்தில் இருந்து கண்காணிக்கப்படும் செயற்பாட்டு நிலையங்களின் வலையமைப்பாக இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

தொழிற்படுகிறது.

நிலையத்தின் இவ் வலையமைப்பானது பெருமளவிற்கு இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் பரவலடைந்திருக்கின்றது. ஒவ்வொரு மாகாணத்திலும் ஒன்பது பிராந்திய நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.



உரு 1 இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பிராந்திய மற்றும் கற்கை நிலையங்கள்

மேலதிகமாக ஏனைய மாவட்டங்களில் பத்தொன்பது கற்கை நிலையங்களும் அமைந்துள்ளன. பிராந்திய கல்விச் சேவைகளின் தலைமையகம் மத்திய வளாகத்தில் அமைந்திருப்பதுடன் அது ஆறு பீடங்களுடனும் ஏனைய அனைத்து பங்குதாரர்களுடனும் கல்விசார் நிர்வாகத்தினை ஒருங்கிணைக்கின்றது (உரு.1 ஐ பார்வையிடவும்)

பிராந்திய கல்விச் சேவைகளின் தொழிற்பாடுகள்

பிராந்திய கல்விச் சேவைகள் அலகானது கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்களை வழங்குவதற்காக பெருமளவான உதவிச் சேவைகளை வழங்குகின்றது. தகவல்களை வழங்குதல், விண்ணப்பங்களை சேகரித்தல் மற்றும் சமர்ப்பித்தல், மாணவர்களைப் பதிவுசெய்தல் மற்றும் மீள்பதிவுசெய்தல், மாணவர் நிபுணத்துவ ஆலோசனை வழங்குதல், கற்கைப் பாடப்புத்தகங்களை விநியோகித்தல், நாட் பாடசாலை/ செயன்முறை வகுப்புக்கள் என்பவற்றினை ஒருங்கிணைத்தல் மற்றும் தொடர்ச்சியான மதிப்பீடுகள் மற்றும் இறுதிப் பரீட்சைகளை நடத்துதல் என்பன அத்தகைய சேவைகளில் சிலவாகும். இந்த நாளாந்த தொழிற்பாடுகளுக்கு மேலதிகமாக, நாட்டின் அனைத்து பாகங்களிலும் பிராந்திய உயர் கல்வி தேவைகளை பூர்த்திசெய்வதற்கான மத்திய வளாகத்தின் பிராந்திய அமைப்பாகவும் பிராந்திய கல்விச் சேவைகள் தொழிற்படுகின்றது.

2020ஆம் ஆண்டின் முக்கிய அம்சங்கள்

நாடு முழுவதுமான ஊரடங்கிற்கு வழிவகுத்த கோவிட் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு தொடர்பான நாட்டின் நிலைமை உயர் கல்வித் துறையினைப் பெரிதும் பாதித்தது. பல்வேறு முக்கிய அம்சங்கள் காணப்படுகின்றன. அவை

- 2020 ஜனவரியில் பிராந்திய கல்விச் சேவைகளின் புதிய பதில் பணிப்பாளராக கலாநிதி. ஷான்த அபேசிங்க கடமையில் நியமிக்கப்பட்டமை
- 09 ஜனவரி 2020 இல் மாத்தளை கற்கை நிலையம் திறந்து வைக்கப்பட்டது. மாத்தளையில் இக் கற்கை நிலையத்தின் ஸ்தாபிப்புடன் பல்கலைக்கழகம் ஒவ்வொரு கற்கை நிலையத்திலும் குறைந்தது ஒரு நிலையம் எனும் அதன் பிராந்திய வலையமைப்பினை வலுப்படுத்தியது.
- யாழ்ப்பாண பிராந்திய நிலையத்தின் புதிய ஐந்து மாடிக் கட்டடத்தின் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதுடன் 2021 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் அனைத்து கட்டுமானப்பணிகளும் பூர்த்திசெய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- அரசினால் கட்டடங்களுடன் பெற்றுக்கொடுக்கபட்ட புதிய காணியில் கிளிநொச்சி கற்கை நிலையத்தின் விரிவாக்க நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.
- 2017 இல் மீளாய்வு செய்ததன் பின்னர் முகாமைத்துவ சேவைகள் துறை பிராந்திய கல்விச் சேவைகள் பணிநிலையினை அங்கீகரித்துள்ளது.
- பிராந்திய கல்விச் சேவைகளின் உதவிப் பதிவாளர் பதவி பணிநிலை பதவிக்கான ஒப்புதலுடன் மீட்டெடுக்கப்பட்டிருக்கின்றது.
- 2020 டிசம்பரில் இருந்து பொலநறுவை, ஷற்றன் மற்றும் மொனராகலை கற்கை நிலையத்திற்கு புதிய உதவிப் பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர்.
- ஐந்நூறு புதிய கணினிகளுடன் கணினி ஆய்வுகூடத்தின் கொள்திறன் தரமுயர்த்தப்பட்டதுடன் தற்போது அனைத்து நிலையங்களிலும் இணைய வசதியுடன் கூடிய 750 கணினிகள் காணப்படுகின்றன.
- அனைத்து பிராந்திய மற்றும் கற்கை நிலையங்களுக்கும் வை.ை.பை வசதியினை வழங்குவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

- தற்போதுள்ள கோவிட்-19 தெருந்தொற்றினை கருத்தில்கொண்டு அச்சிடப்பட்ட கற்கை சாதனங்கள் தேவைப்படும் மாணவர்களுக்கு தபால் சேவை ஊடாக அவர்கள் இருக்கும் இடத்திற்கே தற்போது அவை விநியோகிக்கபடுகின்றன.
- திறந்த பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் நிதியியல் உதவியுடன் ஊரடங்கு காலப்பகுதியில் அனைத்து ஒப்பந்த அடிப்படை துப்பரவுப் பணியாளர்களுக்கும் ரூ.5000 வழங்கப்பட்டது.

6.2 நூலகம்



கோவிட்-19 தீவிர நோய்ப்பரவலுடன் உலகின் ஏனைய நாடுகளைப் போல இலங்கை திறந்த பல்கலைக்கழக நூலகத்திற்கும் 2020 ஆம் ஆண்டு ஒரு சிக்கலான ஆண்டாக அமைந்திருந்தது. 2020 மார்ச் முதல் நூலகமானது மாணவர்கள் பாவனைக்கு அனுமதியளிக்காது மூடப்பட்டிருந்தது. நூலக பணியாளர்கள் மற்றும் பயனாளர்களின் பாதுகாப்பிற்காக பல்வேறு மட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்த வேண்டியிருந்தது. எனினும் ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையான பயனாளர்கள் அனுமதிக்கப்பட்டதுடன் தமக்கு வேண்டிய கற்கை சாதனங்களை இரவல் பெற்றுக்கொள்ள மாத்திரம் அனுமதிக்கப்பட்டு அவர்கள் நூலகத்தினை விட்டு நீங்க வேண்டுடிருந்தது. மனிதர்களுக்கிடையிலான தொடர்புகளை குறைப்பதற்காக கற்கை சாதனங்கள் விநியோகிக்கும் இடத்தில், தாமாகவே அவற்றினை எடுத்துக்கொள்வதற்கும் மீளச்செலுத்துவதற்குமான கணினிமயப்படுத்தப்பட்ட அமைப்பொன்று நிறுவப்பட்டிருந்தது. அதன் மூலம் கோவிட்-19 பரவலைக் குறைப்பதற்கான ஒரு நடவடிக்கையாக நூலக பணியாளர்களின் கைகளில் நூல்களை ஒப்படைக்காது நூலக பயனாளிகளுக்கு அவர்களது நூல்களை தாமாகவே மீளளிக்கக்கூடியதாக இருந்தது. பின்பு மீளளிக்கபட்ட நூல்கள் புத்தக அடுக்கிற்கு அனுப்பப்படுவதற்கு முன்னர் 03 நாட்கள் தனியானதொரு அடுக்கில் வைக்கப்படும்.

கோவிட் நெருக்கடியின் போது இலங்கை திறந்த பல்கலைக்கழக கல்விசார் சமூகத்தினருக்கு உதவும் நடவடிக்கையாக அவர்களது வீடுகளில் இருந்து இலத்திரனியல் வளங்களை பெற்றுக்கொள்வதற்காக நூலகத்தினால் நூலக இணையத்தளத்தினை மீள்வடிவமைக்கக்கூடியதாக இருந்தது.



பொதுப்போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்டு இருந்தமையினாலும் மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்து தடை அமுலில் இருந்தமையினாலும், நூலக பணியார்களுக்கு சுழற்சி முறை வழங்கப்பட்டு அவர்கள் வாரத்தில் மூன்று நாட்களுக்கு மாத்திரம் கடமைக்கு செல்ல வேண்டப்பட்டனர்.நூலக பணியாளர்களுக்கு வீடுகளில் இருந்து பணியாற்றக்கூடிய வகையில் கடமைகள் வழங்கப்பட்டதுடன் அவர்கள் பெறும் சம்பளத்திற்கு நியாயம் சேர்க்கும் அடிப்படையில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் சிரேஷ்ட உதவிப் பதிவாளருக்கு

அறிக்கை ஒன்றினை சமர்ப்பிக்க அவர்கள் வேண்டப்பட்டிருந்தனர்.சில பணியாளர்கள் அருகில் இருக்கும் பிராந்திய நிலையத்திற்கு கடமைக்கு செல்ல அனுமதிக்கப்பட்டனர். எனினும், கல்விசார் பணியாளர் பற்றாக்குறை காரணமாக பல ஆண்டு காலமாக பட்டியற்படுத்தப்படாது ஒன்றுதிரண்டிருந்த தொகுப்புக்களை நூலகத்தினால் பட்டியற்படுத்த முடிந்தது.

கல்விசார் பணியாளர்களில் ஒருவர் ஓய்வினை விடுப்பில் சென்றிருந்தமையினால் இலங்கை திறந்த பல்கலைக்கழகமானது சப்பிரகமுவ பல்கலைக்கழகத்தில் இருந்து ஓய்வினை விடுப்பில் சென்ற ஒருவரை ஒரு வருட காலத்திற்கு சிரேஷ்ட உதவி நூலகராக நியமித்திருந்தது. 2020 காலப்பகுதியில் உதவிப் பதிவாளரும் கற்கை விடுப்பில் இருந்தார்.





6.3 பணியாளர் அபிவிருத்தி நிலையம்



இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பணியாளர் அபிவிருத்தி நிலையமானது பல்கலைக்கழகத்தின் பணியாளர்களின் திறன்களை மேம்படுத்துவற்காக கல்விசார் மற்றும் நிர்வாக வேலைகளை மேம்படுத்தவும் அவற்றிற்கு ஆதரவளிக்கவும் என நிறுவப்பட்டதாகும். இதற்காக பணியாளர் அபிவிருத்தி நிலையமானது பல்கலைக்கழகத்தின் பணியாளர் வினைதிறனாகத் தொழிற்படப் தேவையான திறன்களையும், திறமைகளையும் விருத்திசெய்துகொள்வதற்கான பல்வேறு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் வேலைத்திட்டங்களையும் ஒழுங்குசெய்து வளப்படுத்திவருகின்றது.



கல்விசார் பணியாளர்கள், நிர்வாக பணியாளர்கள் மற்றும் கல்விசாரா பணியாளர்கள் உள்ளிட்ட அனைத்து வகையான பணியாளர்களின் துறைசார் விருத்திக்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. வேலைத்திட்டங்களின் பரப்பானது வேலைச்சூழலின் திறன்களை மட்டும் உள்ளடக்காது வேலை மற்றும் வாழ்க்கைச் சமநிலையூடாக தனிநபர் விருத்திக்கும் உதவியது. பணியாளர் அபிவிருத்தி நிலையத்தின் முக்கிய நிகழ்ச்சித்திட்டமாக விரிவுரையாளர்களுக்கு

(தகுதிகாண்) நடத்தப்படும் உயர் கல்வியில் கற்பித்தல் சான்றிதழ் விளங்குகின்றது. அனைத்து விரிவுரையாளர்களும் (தகுதிகாண்) அவர்களுடைய பதவியை உறுதிப்படுத்துவதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் உயர் கல்வியில் கற்பித்தல் சான்றிதழை வெற்றிகரமாக பூரணப்படுத்தியிருக்க வேண்டும்.பணியாளர் அபிவிருத்தி நிலையமானது உயர் கல்வியில் கற்பித்தல் சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டத்தினை 5 முறை நடத்தியிருக்கின்றது. சிரேஷ்ட கல்விசார் உறுப்பினர்களுக்கான அறிமுக நிகழ்ச்சித்திட்டமானது இலங்கையின் ஏனைய பல்கலைக்கழகங்களிடையில் நன்கு இனங்காணப்பட்ட நிகழ்ச்சித் திட்டமாகும். மேலதிகமாக பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பணியாளர்களினதும் தொழில் விருத்தியினை மேம்படுத்துதவற்கு பல்வேறு தொடர்ச்சியான துறைசார் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மற்றும் புதுமுகத்தினருக்கான கற்கை நெறிகளும் நடத்தப்படுகின்றன.

பணியாளர் அபிவிருத்தி நிலையமானது வருடாந்தம் ஊழியர்களின் மொழி ஆற்றலை மேம்படுத்துதவற்கு பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துகின்றது. ரோஸ்ட் மாஸ்டர், சொற்பொழிவு நிகழ்ச்சித்திட்டம், கல்விசார் எழுத்து நிகழ்ச்சித்திட்டம், பல்கலைக்கழகத்தின் அனைத்து பணியாளர்களையும் உள்ளடக்கி தமிழ் மற்றும் ஆங்கிலத்திற்கான தொடர்பாடல் நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றவை அவற்றின் சில நிகழ்ச்சித்திட்டங்களாகும். இந்த வேலைப்பட்டறைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களுடன் பங்குதாரர்களின் அறிவு, திறன்கள், மற்றும் நடத்தை என்பவற்றினை மேம்படுத்துவதற்கு பணியாளர் அபிவிருத்தி நிலையம் எதிர்பார்த்திருக்கின்றது. உள நலனுக்காக வருடாந்தம் ஊக்கப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் நிபுணத்துவ ஆலோசனை வழங்கல் வேலைத்திட்டங்கள் என்பனவும் நடத்தப்படுகின்றன. இந்த அனைத்து வேலைத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றுடன் பணியாளர் அபிவிருத்தி நிலையமானது அனைத்து பங்குதாரர்களினதும் அறிவு, திறன்கள், மற்றும் மனப்பாங்குகள் என்பவற்றினை மேம்படுத்த எதிர்பார்க்கின்றது.

2020 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கோவிட்-19 தொற்று காரணமாக தடங்கல் ஏற்பட்டிருந்த போதிலும் பணியாளர் அபிவிருத்தி நிலையத்தினால் அனைத்து வகையான பணியாளர்களுக்கும் 14 வேலைப் பட்டறைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் நடத்தக்கூடியதாக இருந்தது. இந்த செயற்பாடுகளில் பெரும் எண்ணிக்கையானோர் கலந்துகொண்டிருந்ததுடன் அவற்றில் சில சூம் மற்றும் நிகழ்நிலை இணைப்பு என்பவற்றினூடாக தொலைவில் இருந்தும் சில சுகாதார வழிகாட்டல்களுடன் இசைந்துசெல்லும் வகையில் நேரடியாகவும் நடத்தப்பட்டிருந்தது.

6.4 தொழில் வழிகாட்டல் அலகு



எதிர்கால வேலைப்படையின் பொறுப்புமிக்க வினைத்திறனான உறுப்பினராக வருவதற்கு இலங்கை திறந்த பல்கலைக்கழக பட்டதாரிகளுக்கு உதவுதல் தொழில் வழிகாட்டல் அலகின் பிரதான நோக்கமாகும்.

இந்த அலகானது நாவலவின் புதிய கொழும்பு பிராந்திய நிலைய கட்டடத்தில் அமைந்துள்ளது. பீடங்களுடன் இணைந்து தொழில் வழிகாட்டல் அலகானது பட்டதாரிகளுக்கு வேலை உலகிற்கான தேவைகளை சமாளிப்பதற்கு தேவையான அவர்களது திறன்களையும் ஆற்றல்களையும் விருத்திசெய்வதற்கென வேலைப்பட்டறைகளையும் கருத்தரங்குகளையும் ஒழுங்கமைத்தது.

இவ் அலகு மேலும் தொழில் வழிகாட்டல் திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினை நடத்துவதுடன் இலங்கை திறந்த பல்பலைக்கழக மாணவர்களுக்கிடையில் காணப்படும் திறன் இடைவெளிகளை இணைப்பதற்கான நோக்குடன் ஆற்றல்மிக்க பணியாளர்களை ஒருங்கிணைக்கின்றது. StART@OUSL நிகழ்ச்சித் திட்டமும் தொழில் வழிகாட்டல் அலகினால் ஒருங்கிணைக்கப்படுகின்றன.

கேள்வி அடிப்படையில் தொழில் வழிகாட்டல் அலகினூடாக பாடசாலைகள் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் ஏனைய திறன் மேம்பாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் என்பன நடத்தப்பட்டன. கோவிட் தொற்று சூழ்நிலையுடன் தொழில் வழிகாட்டல் அலகின் செயற்பாடுகள் குறைக்கப்பட்டன. ஆனால் சுயவிபரக் கோவை எழுதுதல், நேர்முகத் தேர்வுக்கு எவ்வாறு முகங்கொடுப்பது ஜோன்ஸ் கீல்ஸ் அமைப்பு போன்ற பல்வேறுபட்ட அமைப்புக்களால் நடத்தப்பட்ட மென்திறன் அபிவிருத்தி பற்றியதான நிகழ்நிலை கருத்தரங்கு பற்றிய செயற்பாடுகள் குறித்து மாணவர்க்கு அறிவிக்கப்பட்டு சூம் வாயிலாக நேரலையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

6.5 அச்சகம் மற்றும் மத்திய அனுப்புகை அலகு

பல்கலைக்கழக அச்சகம்

இலங்கை திறந்த பல்கலைக்கழகமானது தொலைக் கல்வி முறைமையினூடாக அறிவை வழங்குவதற்கும் பரப்புவதற்குமென நிறுவப்பட்டதாகும். இந்த இலக்கை அடைவதற்காக அதிக எண்ணிக்கையான கற்கை சாதனங்கள் மற்றும் ஏனைய கல்விசார் இலக்கியங்கள் என்பன தேவைப்பட்டதுடன் மாணவர்களுக்கு கற்கை சாதனங்களை அச்சிடுவதற்கும் வழங்குவதற்குவதற்குமென ஜக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் (UNDP) உதவியுடன் 1982 இல் அச்சகம் நிறுவப்பட்டது. குறைந்த மற்றும் அடிப்படை உபகரணங்களுடன் ஆரம்பிக்கப்பட்டு தற்போது நவீன இயந்திரங்களுடன் வளம்சேர்க்கப்பட்ட முழுமையாக வளர்ச்சியடைந்த அச்சகமாக விருத்தியடைந்துள்ளது. தற்போது பல்கலைக்கழக அச்சகத்தில் ஐம்பது (50) பணியாளர்கள் இலங்கை திறந்த பல்கலைக்கழக சமூகத்திற்கு சேவையாற்றுவதற்கென பகலிரவுபாராது சேவையாற்றி வருகின்றனர்.

இலங்கை திறந்த பல்கலைக்கழகம் ஆறு பீடங்களால் நடத்தப்படுகின்ற வேறுபட்ட கற்கை நெறிகளைத் தொடரும் 40,000 மாணவர்களைக் கொண்டிருக்கின்றது. இக்கற்கை நெறிகளுக்காக கற்கை சாதனங்களை வெளியிடுதல் அச்சகத்தின் முதன்மை தொழிற்பாடாகும். அத்துடன் அச்சகமானது, துண்டுப்பிரசுரங்கள், ஆண்டறிக்கைகள் கல்விசார் சஞ்சிகைகள் என்பவற்றினையும் அச்சிடுகின்றது. மேலும் நிர்வாகப் பிரிவுகளுக்குத் தேவையாக இருக்கும் பல்வேறுபட்ட அலுவலக ரீதியான ஆவணங்கள் என்பவற்றினை அச்சிட்டும் பொறுப்பும் அச்சகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மேலும் அச்சகம், நிபுணத்துவ ஆலாசனை மற்றும் வளங்கள் நிலையத்தின் கீழ் உயர்கல்வி அமைச்சு மற்றும் ஏனைய பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களால் கோரப்பட்ட சாதனங்களை அச்சிடும் நடவடிக்கையினையும் மேற்கொள்கின்றது.

இலங்கை திறந்த பல்கலைக்கழக அச்சகத்தின் அச்சு கற்கை உபகரணங்கள் -2020

	கற்கை சாதனங்களின் பிரதிகளின் எண்ணிக்கை	கற்கை துண்டுப்பிரசுர பிரதிகளின் எண்ணிக்கை	ஏனைய சாதனங்களின் பிரதிகளின் எண்ணிக்கை
ஜனவரி	74,209	1,100	9,802
பெப்ரவரி	48,125	0	15,192
மார்ச்	10,885	-	-
ஏப்ரல்	கொவிட் -19 தொற்று காரணமாக பல்கலைக்கழகம் மூடப்பட்டிருந்தது		
மே			
ஜூன்	16,705	-	275
ஜூலை	12,985	400	555
ஓகஸ்ட்	14,322	4,800	42,102
செப்டம்பர்	36,476	-	50
ஒக்டோபர்	38,022	-	3,600
நவம்பர்	570	-	48,020
டிசம்பர்	2,260	-	5,525
மொத்தம்	**254,559**	**6,300**	**125,121**

கொழும்பு பிராந்திய நிலையத்தின் பணிகள்

விபரம்	பிரதிகள்
தொல்பொருளியல் பட்டப்பின் நிறுவனம் – 2018 ஆண்டறிக்கை – களனிப் பல்கலைக்கழகம்	60
கலைமாணிப் பட்ட சான்றிதழ்	100
ஆண்டறிக்கை - CUCTA	75
தம்சாரணிய சஞ்சிகை	500
ஆண்டறிக்கை – பல்கலைக்கழக தொழிற் சங்கம்	175
நிபுணத்துவ ஆலோசனை மற்றும் வெளிப்புற வளங்கள் நிலைய அடையாள அட்டைகள்	1000
இலங்கை திறந்த பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிக்கான சான்றிதழ்	275
உயர் கல்வி பற்றியதான கோர் குழுவின் அறிக்கை	300
மனித வள முகாமைத்துவ வியாபார நிர்வாக முதுமாணி விடயத் தொகுப்பு	100

மத்திய அனுப்புகை அலகு

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் மத்திய அனுப்புகை அலகானது கற்கை சாதனங்களை களஞ்சியப்படுத்தல் அனுப்புதல் என்பவற்றில் முக்கிய இடத்தினை பெற்றுக்கொள்வதுடன் தேவையேற்படும்போது பிராந்திய மற்றும் கற்கை நிலையங்களில் பதிவு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது கற்கை சாதனங்களின் இருப்புத்தன்மையினையும் உறுதிசெய்கின்றது. பதிவுசெய்த மாணவர்களின் கற்கை சாதனங்களை களஞ்சியப்படுத்துவதிலும் அனுப்புவதிலும் இது ஆறு பீடங்களிற்கும் சேவை வழங்குனராக விளங்குகின்றது. இது 576 உப றாக்குகளை கொண்டிருக்கின்றது. ஒவ்வொரு றாக்குகளின் அளவானது கற்கைசாதனங்களை முறையாக களஞ்சியப்படுத்தி 1.5 m^3 அளவுகொண்டதாக விளங்குகின்றது.

இலக்குகள்:

- அச்சு நடவடிக்கைகள் முடிந்தவுடன் உடனடியாக இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் அச்சகத்திலிருந்து அனைத்து கற்கை சாதனங்களையும் சேகரித்தல்.
- ஒன்பது பிராந்திய நிலையங்களுக்கும் 18 கற்கை நிலையங்களுக்கும் கற்கை சாதனங்களை அனுப்பிவைத்தல்.
- செயற்பாடுகள்: மத்திய அனுப்புகை அலகானது பின்வருவனவற்றிற்கு பொறுப்பானதாக அமைகின்றது:
    - அச்சிடப்பட்ட கற்கைசாதனங்கள் அனைத்தையும் களஞ்சியப்படுத்தல்.
    - சீ.ஜீ.ஆர் இலங்கை திறந்த பல்கலைக்கழக லொறி மற்றும் ஒப்பந்த கொரியர் சேவையூடாக நாடளாவிய ரீதியில் காணப்படும் பிராந்திய மற்றும் கற்கை நிலையங்களிற்கு கற்கை சாதனங்களை அனுப்பிவைத்தல்.
    - பிராந்திய மற்றும் கற்கை நிலையங்களில் இருந்து திருப்பி அனுப்பப்படும் ஏதேனும் கற்கை சாதனங்களைப் பெற்றுக்கொள்ளல்.
    - ஒவ்வொரு கற்கை சாதனங்களினதும் பிரதியினை பிரதான நூலகத்திற்கு வழங்குதல்.

வசதிகள்/ உட்கட்டமைப்பு/ வளங்கள்:

- கற்கை சாதனங்களை களஞ்சியப்படுத்துவதற்கான சிறந்த சூழல் நிலையுடன் கூடிய45x20 m^2அளவிலான கட்டடம்
- குறிப்பிடப்பட்ட நோக்கங்களை பூரணப்படுத்துவதற்காக மத்திய அனுப்புகை அலகில் 12 பணியாளர்கள் கடமையாற்றுகின்றனர்.
- 576 உப றாக்குகள், ஒரு உப றாக்கின் அளவானது1.5 m^3 ஆகும்.
- இது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் அச்சகத்துடன் இணைக்கப்பட்டிருக்கின்றது.
- ஆறு நிரந்த அலுவலர்கள் (முகாமைத்துவ உதவியாளர்கள்- 02, வேலைகள் உதவியாளர் - 03, சுத்திகரிப்பு பணியாளர்- 01, களஞ்சியப் பொறுப்பாளர்- 01 மற்றும் ஒரு வேலைகள் உதவியாளர் வெற்றிடம் பூரணப்படுத்தப்படவில்லை.
- ஆறு ஒப்பந்த பணியாளர்கள்(3 Pas & 3 OAs)

6.6 தேசிய நிகழ்நிலை தொலைக் கல்வி சேவைகள்

உயர் கல்வி அமைச்சின் கீழ் தொலைக்கல்வி நவீனமயமாக்கல் செயற்றிட்டத்தின் ஒரு பகுதியாக 2013 ஆம் ஆண்டு தேசிய நிகழ்நிலை தொலைக்கல்வி சேவைகள் நிலையம் நிறுவப்பட்டது. இது 2015ஆம் ஆண்டு பங்குனி மாதம் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்திடம் கையளிக்கப்பட்டது. இலங்கையில் தொலைக் கல்வியில் முன்னனி வசதிப்படுத்துனர்களாகவும் வழங்குனர்களாகவும் திகழ்வதே எமது இலக்காகும்.

அந்த இலக்குடன் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் உள்ள தேசிய நிகழ்நிலை தொலைக்கல்வி சேவைகள் நிலையமானது பின்வரும் வழிகளில் நிகழ்நிலைக் கல்விக்கு ஆதரவு வழங்குவதற்கான வசதிகளைக் கொண்டிருக்கின்றன.

- நிகழ்நிலை பாட உள்ளடக்க அபிவிருத்தி, தொகுப்பு மற்றும் பராமரிப்பு
- காணொலி மாநாட்டு வசதிகள்
- நிகழ்நிலை பரீட்சைகள்
- வேலைப்பட்டறைகள் மற்றும் பயிற்சிகள்

2020 ஆம் ஆண்டின் போது தேசிய நிகழ்நிலை தொலைக்கல்வி சேவைகள் நிலையம் நிகழ்நிலை உள்ளடக்க விருத்தி, நிகழ்வினை நடத்துதல் மற்றும் பேணல் மற்றும் நிகழ்நிலை பரீட்சைகளை நடத்துதல் உடன் தொடர்புடைய வெளிப்புற நிலையங்கள் பலவற்றிற்குமான வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளை திட்டமிட்டு தயாரித்தது. நாட்டில் தற்போது நிலவும் பெருந்தொற்று காரணமாக பல்கலைக்கழகம் பல மாதங்களாக மூடப்பட்டிருந்தமையினாலும் நிதியிடலில் குறிப்பிட்ட நிறுவனங்களினால் முகங்கொடுக்கப்பட்ட நிதிநெருக்கடியினாலும் இதனை அமுல்ப்படுத்த முடியவில்லை. எனினும் தேசிய நிகழ்நிலை தொலைக்கல்வி சேவைகள் நிலையம் 2020 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் பல்கலைக்கழகத்திற்கு உள்வாங்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கான நிகழ்நிலை விண்ணப்ப சமர்ப்பிப்பு வசதியினை வழங்கியது.

6.7 சர்வதேச உறவுகள் அலகு

சர்வதேச உறவுகள் அலகு 2013 ஒக்டோபர் மாதம் நிறுவப்பட்டது. 1990 ஆண்டின் 01 ஆம் இலக்க இலங்கை திறந்த பல்கலைக்கழக நிலையியற் சட்டத்தின் பிரிவு 19 உடன் இணைந்து வாசிக்கப்படவேண்டிய 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க சட்டத்தின் பிரிவு 135 இன் கீழ் இலங்கை திறந்த பல்கலைக்கழக பேரவையினால் உருவாக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டின் இலங்கை திறந்த பல்கலைக்கழக துணைவிதி இலக்கம் 09 இன் கீழ் தொழிற்படுகின்றது.

சர்வதேச உறவுகள் பிரிவானது துணைவேந்தரின் நேரடி மேற்பார்வையின் கீழ் பணிப்பாளர் ஒருவரினால் முகாமைத்துவம் செய்யப்படுகின்றது. அதன் நிர்வாக மற்றும் நிதியியல் செயற்பாடுகள் முகாமைத்துவ சபையினால் நிர்வகிக்கப்படுகின்றன. சர்வதேச உறவுகள் அலகின் பணிப்பாளர் துணைவேந்தரின் சிபாரிசுடன் இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் பேரவையினால் நியமிக்கப்படும் கல்விசார் அலுவலராக இருத்தல் வேண்டும்.

சர்வதேச உறவுகள் தொடர்பான மூல உபாயங்களை வழங்கும் போதும் உலகில் உள்ள ஏனைய பல்கலைக்கழகங்கள் உள்ளடங்களாக ஏனைய நிறுவனங்களுடன் முறையான தொடர்பாடல் தரப்பு இணைப்புக்களை ஏற்படுத்தும் போதும் சர்வதேச உறவுகள் பிரிவானது பல்கலைக்கழகத்திற்கு உயரிய ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குகின்றது.

சர்வதேச உறவுகள் பிரிவின் நோக்கங்கள் கீழ்வருமாறு

அ) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் நிறுவனங்கள், பீடங்கள், மூதவை மற்றும் பேரவை என்பவற்றிற்கு தந்திரோபாயங்கள் மற்றும் நாடுகளுக்குரியதான பரிந்துரைகளை உருவாக்குதல்

ஆ) அபிவிருத்திகளை ஒருங்கிணைத்தல் மற்றும் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் இருதரப்பு மற்றும் பல்தரப்பு உடன்படிக்கைகள் மற்றும் வெளிநாடுகளுடனான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் என்பவற்றினை மீளாய்வுசெய்தல்.

இ) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பணியாளர்கள் மற்றும் மாணவர்களுக்கான சர்வதேச கூட்டு ஆராய்ச்சி மற்றும் கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் மேம்படுத்துதல்.

ஈ) சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சியாளர்களாகவும் ஆசிரியர்களாகவும் தம்மை விருத்தி செய்துகொள்வதற்கு இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் அலுவலர்களுக்கு சந்தர்ப்பங்கள் வழங்குதல்.

உ) சர்வதேச ஆராய்ச்சிகள் மற்றும் ஏனைய நடவடிக்கையில் ஈடுபடுவதன் மூலம் இலங்கையின் அபிவிருத்திக்கு பங்களிப்புசெய்வதற்கு இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பணியாளர்களுக்கு உதவுதல்.

ஊ) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பணியாளர் மற்றும் மாணவர்களுக்கு உலகலாவிய ரீதியில் இணைந்துசெயற்படவும், பரம்பலடைவதற்கும், ஒத்துழைக்கவும் சந்தர்ப்பம் வழங்கல்.

எ. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பட்டதாரிகளுக்கு வெளிநாட்டு தொழில்வாய்ப்புக்களை கண்டறிந்துகொள்ள உதவுதல்.

ஏ.வெளிநாட்டு மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஏனைய விருந்தினர்களுக்கு இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் தங்கியிருக்கின்ற காலப்பகுதியில் தேவையான உதவிகளை வழங்குதல்.

ஐ. வெளிநாட்டில் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் நிகழ்ச்சித்திட்டங்களை மேம்படுத்துதல் மற்றும் பங்குடைமைகளை முன்னேற்றுதல்.

ஒ. முக்கிய சர்வதேச அரசாங்கம் மற்றும் அரசாங்கம்சாரா முகவர்கள், இலங்கையில் உள்ள தூதரக அமைப்புக்கள் மற்றும் வெளிநாடுகளில் உள்ள இலங்கை அமைப்புக்கள் என்பவற்றுடன் தொடர்புகளை ஒருங்கிணைத்தல்.

சர்வதேச உறவுகள் அலகானது 2013 முதல் 2020 வரையிலான கடந்த ஏழு ஆண்டுகளில் மேற்சொல்லப்பட்ட இலக்குகளை அடைவதில் துடிப்புடன் ஈடுபட்டது. பின்வருவன செயற்பாடுகளின் சுருக்கமாகும்.

இருதரப்பு மற்றும் பல்தரப்பு கூட்டு ஒப்பந்தங்களை வசதிப்படுத்துதல்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம்

தொடர் இலக்கம்	நிறுவனத்தின் பெயர்	நாடு	கைச்சாத்திட்ட ஆண்டு
01	ஒக்கயாமா பல்கலைக்கழகம்	ஜப்பான்	2020
02	ஊற்றோறிக்காண்ட் திறந்த பல்கலைக்கழகம்	இந்தியா	2020
03	வன்ட்லென் பல்தொழில்நுட்ப பல்கலைக்கழகம்	கனடா	2020
04	மருந்தகத்திற்கான ஜே.எஸ்.எஸ். கல்லூரி	இந்தியா	2020

அங்கீகாரம் பெறுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

தொடர் இலக்கம்	நிறுவனத்தின் பெயர்	நாடு	செல்லுபடியாகும் காலப்பகுதி
01	பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி	இந்தியா	5ஆண்டுகள்
02	கொரியன் தேசிய திறந்த பல்கலைக்கழகம்	கொரியக் குடியரசு	5ஆண்டுகள்
03	வான்ட்லென் பல்தொழில்நுட்ப பல்கலைக்கழகம்	கனடா	5ஆண்டுகள்
04	ஓ.ஈ.ஆர்.யூ	நியூசிலாந்து	3 ஆண்டுகள்
05	இசெக்ஸ் பல்கலைக்கழகம்	ஐக்கிய இராச்சியம்	5 ஆண்டுகள்
06	சேஷெல்ஸ் பல்கலைக்கழகம்	சேஷெல்ஸ்	5 ஆண்டுகள்
07	ஷங்காய் திறந்த பல்கலைக்கழகம்	சீனா	3 ஆண்டுகள்
08	ஒக்கயாமா பல்கலைக்கழகம் (புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் உடன்படிக்கை)	ஜப்பான்	5ஆண்டுகள்

தற்போதுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் உடன்படிக்கையினை மீளாய்வுசெய்தல் மற்றும் புதுப்பித்தல்

லியூவன் மற்றும் லிம்போர்க், பெல்ஜியம் பல்கலைக்கழக கல்லூரி- 17/10/2020 இல் முடிவடையும்.

சர்வதேச அரிசி ஆராய்ச்சி நிறுவனம், பிலிப்பைன்ஸ்- 30/10/2020 இல் முடிவடையும்.

இராஸ்மஸ்- இலங்கை கிழக்குப் பல்கலைக்கழக பங்குடைமை ஒப்பந்தம் மற்றும் உலகை அபிவிருத்திசெய்வதில் விஞ்ஞானத்தில் பெண்கள் யுனெஸ்கோவின் முன் ஆரம்ப தொழில் பெண் விஞ்ஞானிகள் நிகழ்ச்சித் திட்டம் : இப் பாரிய ஒப்பந்தங்களின் ஒப்புதல் செயல்முறைகளை சர்வதேச உறவுகள் அலகு வசதிப்படுத்தியது.

ஒரு ஆண்டிற்கு மேல் எடுக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் / ஒப்பந்த அங்கீகரிப்பின் தற்போதைய செயன்முறையினை துரிதப்படுத்துவதற்கு சர்வதேச உறவுகள் அலகினால் கல்வி அமைச்சுக்கு முன்மொழிவுகள் அனுப்பிவைக்கப்பட்டன. 2020 செப்ரெம்பரில் நடைபெற்ற கல்வி அமைச்சின் முன்னெற்ற மீளாய்வு கூட்டத்தில் இது கவனத்தில் எடுக்கப்பட்டது.

கூட்டான ஆராய்ச்சி மற்றும் கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக இலங்கை திறந்த பல்கலைக்கழக பணியாளர்களுக்கு சந்தர்ப்பங்கள் வழங்கல்

வழிகாட்டல்களின் அபிவிருத்தி

ஸ்பிளிட்- சைட் தத்துவவியல் கலாநிதி நிகழ்ச்சித்திட்டத்திற்கான வழிகாட்டல்கள்

வருகைதரு விரிவுரையாளர் மற்றும் வருகைதரு புலமையாளர்களுக்கான வழிகாட்டல்கள்

வருகைதரு ஆராய்ச்சி கூட்டுப்பணியாளர்கள் /புலமையாளர்கள்– சர்வதேச உறவுகள் அலகினால் வசதிப்படுத்தப்பட்டவை: 2020

	ஒன்றிணைந்த வெளிநாட்டுப் பல்கலைக்கழகம்	**நாடு**	**புலமையாளரின் பெயர்**	**காலப்பகுதி**
01	கொம்சாட்ஸ் பல்கலைக்கழகம், இஸ்லாமாபாத் லஹோர் பல்பலைக்ககழகம்	பாக்கிஸ்தான்	கலாநிதி மொஹமட் யார்	1 வாரம்
02	ரொறாண்டோ பல்கலைக்கழகம்	கனடா	கலாநிதி.பொன்னி அரசு	2 வருடங்கள்

உலகலாவிய ரீதியில் ஒத்துழைப்புடன் செயற்பட, பரம்பலடைய மற்றும் பங்களிப்புசெய்ய இலங்கை திறந்த பல்கலைக்கழக பணியாளர்களுக்கும் மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கல்

இலங்கை திறந்த பல்கலைக்கழக இலத்திரனியல் செய்திமடல் : வெளிநாடுகளில் உள்ள கல்விசார் வாய்ப்புக்கள் மற்றும் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்திற்கான வெளிநாட்டு விருந்தினர் நிகழ்வுகள் பற்றிய தகல்களைப் பரப்புவதற்கு இரண்டு இலத்திரனியல் செய்திமடல்கள் ஆரம்பிக்கப்பட்டன.

அனைத்து பீட சந்திப்புக்களிலும் நிகழ்ச்சி நிரலாக சர்வதேச உறவுகள் அலகின் செயற்பாடுகள்:

2020 ஆம் ஆண்டின் 26 வது முகாமைத்துவ சபை கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி அனைத்து பீட சந்திப்புக்களிலும் நிகழ்ச்சி நிரலாக சர்வதேச உறவுகள் அலகின் செயற்பாடுகள் அறிவிக்கப்பட்டன. இது பணியாளர்களுக்கு இடையில் வாய்ப்புகள் மற்றும் நிகழ்வுகள் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தவும் சர்வதேச உறவுகள் அலகினை மேலும் அபிவிருத்தி செய்வதற்கான ஆழமான பின்னூட்டல்களை பெற்றுக்கொள்ள இயலச்செய்தது.

வலைத்தள கருத்தரங்கு அமர்வுகள்*:2020*

வலைத்தள கருத்தரங்கு தலைப்பு	**வழங்குபவர்**	**இணைந்த நிறுவனம்**
Horizon 2020- Green Deal Call – பங்குபற்றுனர்களுக்கான குறிப்புகள்	கலாநிதி ஜோர்ச் போனஸ்	ஐரோப்பிய – இலங்கை புத்தாக்க பங்குடைமை (EU – SLIP)

சர்வதேச உறவுகள் அலகினால் வசதிப்படுத்தப்பட்டு இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் நடைபெற உள்ள வேலைப்பட்டறைகள்

வேலைத்திட்டம் / மாநாட்டின் பெயர்	**தூதுவர்**	**இணைந்த நிறுவனம்**
திறந்த பல்கலைக்கழக வருடாந்த மாநாட்டின் 34 வது ஆசிய ஒன்றியம்	வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு பங்குபற்றுனர்கள்	திறந்த பல்கலைக்கழக ஆசிய ஒன்றியம், இந்தோனேசியா

வெளிநாட்டு மற்றும் கூட்டு பங்குடைமைகளில் இலங்கை திறந்த பல்கலைக்கழக நிகழ்ச்சித் திட்டங்களை மேம்படுத்தல்

வெளிநாட்டு மாணவர்களுக்காக தகவல்களை பதிவேற்றம் செய்தல் : சர்வதேச உறவுகள் அலகின் வலைத்தளமானது வெளிநாட்டு மாணவர்களுக்கான தகவல்களுடன் புதுப்பிக்கப்பட்டது. விண்ணப்பிப்பதற்காக எதிர்பார்த்திருக்கும் வெளிநாட்டு மாணவர்களுக்கு வழிகாட்டல்களை வழங்குவதற்காக அடிக்கடி கேட்கப்படும் வினாக்கள் வடிவமைக்கப்பட்டன.

விளம்பரப்படுத்தல் சாதனங்கள் வடிவமைப்பு மற்றும் விநியோகம் :வெளிநாட்டு மாணவர்களுக்கான இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் தொழிற்பயிற்சிகள், கற்றல் மற்றும் ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றியதான விளம்பரப்படுத்தல் சாதனங்கள் வடிவமைக்கப்பட்டு கல்விசார்

வலைப்பின்னலுக்கு விநியோகிக்கப்பட்டன. E-Flyer " வெளிநாட்டு மாணவர்கள் புலமைப்பரிசில்கள் மற்றும் கூட்டு நிகழ்ச்சித் திட்டங்கள்" 400 ஆசிய மற்றும் உலகலாவிய பல்கலைக்கழகங்களுக்கு இடையில் விநியோகிக்கப்பட்டது.

'Overseas ready' நிகழ்ச்சித் திட்டங்கள் : சர்வதேச உறவுகள் அலகானது வெளிநாட்டு மாணவர்களுக்கு வழங்கக்கூடிய கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றி பீடங்களிடமிருந்து தகவல்களை சேகரிக்கின்றது. இதற்கான தேவைப் பகுப்பாய்வானது இதன் வழிகாட்டல் விருத்தியினைப் பின்பற்றும்.

புரூனே டருசலாம் பல்கலைக்கழகத்துடனான சந்திப்பு

புரூனே இன் டருசலாம் பல்கலைக்கழக ஒருங்கிணைந்த விஞ்ஞான பீட பீடாதிபதியுடனான சந்திப்பொன்று ஓகஸ்ட் 2020 நடைபெற்றது. புத்திசாலித்தனமான பயிர்ச்செய்கை, அரிசி ஆராய்ச்சி பரிமாற்றங்களிற்கான வாய்ப்புக்களையும் அவர் குறிப்பிட்டிருந்தார். முறையான பங்குடைமையினை உருவாக்கிக்கொண்ட அதேவேளை கூட்டான ஆராய்ச்சி செயற்றிட்டங்களையும் உருவாக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் எதிர்கால தத்துவவியல் கலாநிதி விண்ணப்பதாரிகள் பலர் புரூனே இன் டருசலாம் பல்கலைக்கழகத்துடன் கூட்டான ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பிப்பதற்குள்ளனர்.

வெளிநாட்டு தொழில் முன்னேற்றத்தினைப் பெற்றுக்கொள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழக பட்டதாரிகளுக்கு உதவுதல்

வெளிநாட்டு கல்விசார் நிறுவனங்களில் இலங்கை திறந்த பல்கலைக்கழக பழைய மாணவர் நிகழ்ச்சித் திட்டம் : பழைய மாணவர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு இடையில் தொடர்புகளைப் பேணுவதற்கு சர்வதேச உறவுகள் அலகினால் இந்த நிகழ்ச்சித் திட்டம் வடிவமைக்கப்பட்டது. இலங்கை திறந்த பல்கலைக்கழக பழைய மாணவர்களுக்காக அவர்களது தகவல்களை சேகரித்து கொள்வதற்காகவும் இலங்கை திறந்த பல்கலைக்கழகம் பற்றிய அவர்களது கருத்துக்களை பதிவுசெய்தல் போன்றவற்றிற்காகவும் கூகுள் வடிவிலான ஆய்வு வினாக்கொத்து நடத்தப்பட்டது. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் 34 பழைய மாணவர்களில் தெரிவுசெய்யப்பட்ட 6 பழைய மாணவர்களுடன் மெய்நிகர் நேர்காணல்கள் நடத்தப்பட்டு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன. வெளிநாட்டு பழைய மாணவர் தூதுவரை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்தினை தரமுயர்த்துதல்: ஜேர்மனிய கல்வி முறைமையில் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்திற்காக ஒதுக்கப்பட்ட வகை டாட் அங்கீகரிப்பானது இலங்கையின் ஏனைய அரச பல்கலைக்கழகங்களை விட குறைவானதாக காணப்படுவதாக பல மாணவர்களும் பணியாளர்களும் தெரிவித்தனர். அது அவர்களுக்கு பல தீமைகளை ஏற்படுத்துகிறது. இந்த நிலையினை மீளாய்வு செய்வதற்காக பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவின் ஊடாக சர்வதேச உறவுகள் அலகானது டாட் மற்றும் ஜேர்மனியின் வெளிநாட்டுக்கான மத்திய அலுவலகம் (ZAB) என்பவற்றுடன் நிலையான தொடர்பாடலில் ஈடுபட்டு வருகின்றது. இந்த நோக்கிற்காக அனைத்து பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்குமான நுழைவுத் தகைமைகள் குறித்த பதிவேற்றப்பட்ட அறிக்கை உருவாக்கப்பட்டது.

முக்கிய சர்வதேச அரச மற்றும் அரச சார்பற்ற முகவர்கள், இலங்கையின் இராஜதந்திர அமைப்புக்கள், மற்றும் இலங்கை வெளிநாட்டு அமைப்புக்கள் என்பவற்றிற்கு இடையிலான உறவுகளை ஒருங்கிணைத்தல்

இராஜதந்திர நோக்கிலான சந்திப்புக்கள் துணைவேந்தர் மற்றும் பணிப்பாளர் / சர்வதேச உறவுகள் அலகு ஆகியோர் ஆப்கானிஸ்தானின் இஸ்லாமிய குடியரசின் தூதுவரின் அழைப்பின் பெயரில் அவரை சந்தித்தனர். இச் சந்திப்பில் புலமைப்பரிசில் வழங்கல் மற்றும் ஆப்கானிஸ்தானில் உள்ள பல்கலைக்கழகத்திற்கு நிதி வழங்கல் பற்றி கலந்துரையாடப்பட்டது. அவர் மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடத்தினால் வழங்கப்படுகின்ற அபிவிருத்திக் கற்கைகளில் முதுகலைமாணிப் பட்டம் மற்றும் முகாமைத்துவ கற்கைகள் பீடத்தினால் வழங்கப்படுகின்ற வியாபார நிர்வாக முதுமாணிப்பட்டம் ஆகியவற்றில் ஆர்வமாக இருந்தார்.

சர்வதேச உறவுகள் அலகானது மியன்மாருடனான பங்குடைமையினையும் சேவை வழங்கல் செயற்றிட்டத்தினை விருத்தி செய்வதற்காக மியன்மாருக்கான இலங்கை தூதர் மற்றும் வெளிநாட்டு அமைச்சு ஆகியவற்றுடன் தொடர்புகளை ஏற்படுத்தியவண்ணமுள்ளது.

COL-L3F செயற்றிட்டத்தினுடைய நிறுவனமயமாக்கல் : இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் சேவை வழங்கல் நிகழ்ச்சித் திட்டம், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரினால் நியமிக்கப்பட்ட செயற்றிட்ட குழுவினால் முகாமைத்துவம் செய்யப்பட்டது. இது தற்போது சர்வதேச உறவுகள் அலகினால் நிறுவனமயமாக்கப்பட்டிருப்பதுடன் செயற்றிட்ட குழுவின் கோரிக்கையின் அடிப்படையில் அதன் செயற்பாடுகளை முகாமைத்துவ சபை கண்காணிக்கும்.

வெளிநாட்டு மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஏனைய விருந்தினர் ஆகியோர் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் தங்கியிருக்கையில் தேவையான உதவிகளை வழங்கல்

சர்வதேச உறவுகள் அலகினால் வழங்கப்பட்ட தூதுக் குழு - 2020

தொடர் இல.	நாடு	தூதுவர்	இணைந்த நிறுவனம்
01	நேபால் தூதுவர்களின் விஜயம்	கலாநிதி எலென் காம், பேராசிரியர் டீப். பகதூர் அதிகாரி, பேராசிரியர் சுஷான் ஆச்சர்யா,கலாநிதி தனபதி சுபேதி	ஓஸ்லோ மெட்றோபொலிற்றன் பல்கலைக்கழகம், ட்றிபுவான் பல்கலைக்கழகம், காத்மண்டு பல்கலைக்கழகம்
02	பெல்ஜியம் தூதுவர்களின் விஜயம்	கலாநிதி விம் லுவாவெட் மற்றும் கலாநிதி கிறிஸ்	லீவன் மற்றும் லிம்போர்க் பல்கலைக்கழக கல்லூரி, பெல்ஜியம்

பல்கலைக்கழக கல்லூரி லியுவேன் லிம்பேர்க் பெல்ஜியத்தினை சேர்ந்த இலங்கை திறந்த பல்கலைக்கழகத்திற்கான வருகைதரு ஆராய்ச்சி மாணவி செல்வி. லோரா ஒலிவிடஸ் கொரியஸ் இற்கு பெல்ஜியத்திற்கான விசாவினைப் பெற்றுக்கொள்வதற்கான மருத்துவ அறிக்கையினைப் பெற்றுக்கொள்வதற்கு சர்வதேச உறவுகள் அலகு உதவியினை வழங்கியது. வெளிநாட்டு பயணம் தொடர்பான கோவிட்-19 கட்டுப்பாடுகள் காரணமாக கிட்டத்தட்ட 4 மாதங்களாக நாட்டிலே

தங்கியிருக்க வேண்டியேற்பட்டதனால் இம் மாணவி மன அழுத்தத்திற்கு ஆளாகியிருந்தார். அவர் இறுதியில் 27 யூலை 2020 அன்று பெல்ஜியத்தை சென்றடைந்தார்.

ஒழுங்குசெய்யப்பட்ட சிறப்பு விரிவுரை (இவ் அனைத்து விரிவுரைகளும் நேரடி ஒலி பரப்புசெய்யப்பட்டதுடன் காணொலிகளை இலங்கை திறந்த பல்கலைக்கழக வலைத்தளத்தில் பார்வையிட முடியும்): 2020

தொடர்.இல.	சிறப்பு விரிவுரைத் தலைப்பு	வழங்கியவர்	பல்கலைக்கழகம்
01	அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கான மலிவான சுகாதார பராமரிப்பு தீர்வுகள்	கலாநிதி முஹமட் யார்	கொம்சாட்ஸ் பல்கலைக்கழகம் இஸ்லாமாத்,லாகூர் பல்கலைக்கழகம்



1 கலாநிதி முஹமட் யார் அவர்களுடனான சந்திப்பு- ஆராய்ச்சி கூட்டிணைப்பாளர்



2 – திருமதி சுபாங்கி சூட் உடனான சந்திப்பு - Coursera for Campus



3 - கலாநிதி முஹமட் யார் இனால் வழங்கப்பட்ட சிறப்பு விரிவுரை



4 - லீவன் மற்றும் லிம்போர்க் பல்கலைக்கழக கல்லூரி, பெல்ஜியத்தின் கலாநிதி விம் லுவாவெட் உடனான சந்திப்பு



5.1 நேபால் தூதுவரின் விஜயம்




5.2 –நேபால் தூதுவரின் விஜயம்



6.3 –நேபால் தூதுவரின் விஜயம்



6.1 - ஒக்கயாமா பல்கலைக்கழகத்துடனான புரிந்துணர்வு உடன்படிக்கை



6.2.ஒக்கயாமா பல்கலைக்கழகத்துடனான புரிந்துணர்வு உடன்படிக்கை



6.3 ஒக்கயாமா பல்கலைக்கழகத்துடனான புரிந்துணர்வு உடன்படிக்கை

6.8 தொழில் தொடர்பு நிலையம்

தொழிற் துறையினையும் வணிக செயற்பாடுகளையும் ஒருங்கிணைப்பதற்கான முறைசார் பொறிமுறையாக பீடத்தினுள் தொழில்முனைவோரின் செயற்பாடுகளை பயிற்றுவிப்பதற்காக பொறியியல் தொழில்நுட்ப பீடமானது 15 டிசம்பர் 2014 அன்று தொழில் தொடர்புநிலையத்தினை நிறுவியது. பொறியியல் தொழில்நுட்ப பீடத்திற்கு வெளிப்புற வியாபார இணைப்புக்களுக்கான உதவியினை தொழில் தொடர்புநிலையம் வழங்குகின்றது. ஆராய்ச்சியாளர்களுடன் இருதரப்புசார் நலன்பயக்கக்கூடிய உறவுகளை கட்டியெழுப்புவதில் தொழிற்துறைசார் கூட்டுப் பணியாளர்களுக்கு உதவுவதில் தொழில் தொடர்புநிலையம் சிறப்பான முறையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. வளாகத்தினுள் சிறந்த தகவல் தகவல் வழங்கும் அலுவலகமாக மாறுவதற்காக தொழில் தொடர்புநிலையம் விடாமுயற்சியுடன் செயற்பட்டுவருகின்றது.

ஜனவரி 2020 முதல் டிசம்பர் 2020 வரையிலான காலப்பகுதியில் தொழில் தொடர்பு நிலையத்தினால் பின்வரும் வளர்ச்சி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

1.ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியினூடாக வெளிப்புற நிறுவனங்களுடன் கூட்டாக இணைந்து தொழிற்துறைக்கு ஆதரவளித்தல்

பலாப்பழத் தீவனம் மற்றும் உடனடித் தீவனம் ஆகியவற்றினைப் பயன்படுத்தி பசுமாடுகளின் பால் உற்பத்தியினை அதிகரிப்பதோடு தொடர்புடைய ஆராய்ச்சிகளை நடத்துவதற்கு மின்னேரியாவிலுள்ள கூட்டுறவு விவசாய சமூகத்திற்கு உதவுவதற்கு திரு. சரத் பெர்ணாண்டோ, முகாமைத்துவ பணிப்பாளர் ஹீல் லங்கா பிறைவேட் விமிற்றட் அவர்களிடமிருந்து கோரிக்கை ஒன்றினைப் பெற்றிருந்தது.

நெஸ்ரில் லங்கா பீ.எல்.சீ உடன் கூட்டு

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் இருந்து ஆராய்ச்சியின் மூலம் ‘‘சந்தைக்கு எடுத்துச் செல்லல்’’ இற்கான சாத்தியக் கூறுகளைக் கொண்ட உற்பத்திகள் குறித்து ஆராய்வதற்காக நெஸ்ரில் லங்கா இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினை அணுகியது.

(2) அறிவுசார் சொத்து பாதுகாப்பு வணிகமயமாக்கல் செயற்பாடுகள்

இன்று வரை தொழில் தொடர்பு நிலையமானது பின்வரும் காப்பாளர் விண்ணப்பங்களை பூரணப்படுத்த உதவியதுடன் தொழில் தொடர்பு நிலையமானது காப்பாளர்களின் நிலையினை எளிதாக்கி அவற்றின் பதிவுகளை வைத்திருக்கும்.

(i) தொழில் தொடர்பு நிலையமானது 2020 இல் பின்வரும் காப்பாளர் விண்ணப்பங்களை பூரணப்படுத்த உதவியது.

- 3D அச்சிடப்பட்ட அணியக்கூடிய ஆடைகளின் தொகுதி
- ∴பைர் ஒளியியல் பாட்டி வெயார் ஆடைகளின் தொகுதி
- காகித கைவினைப் பொருட்களுக்கான கடதாசி வெட்டும் இயந்திரம் உருவாக்கப்பட்டதுடன் startup ஒன்றினூடாக அது விற்பனை செய்யப்படும்.
- கருவி ஒன்றினூடாக ஒழுங்கான மண் சோதனையினை மேம்படுத்தவதன் மூலம் விவசாயம்சார் உற்பத்திகளை அதிகரித்தல்
- மன்கி றெபெறென்ட் கன்(Gun)
- அலங்கார ஒக்கிட் தாவரம்

வணிகமயமாக்கல் செயற்பாடுகள்

(அ) உள்ளக அலங்காரங்களுக்காக ஒக்கிட் தாவரங்களை விருத்திசெய்தல் - நடைபெற்றுக் கொண்டிருக்கும் செயற்றிட்டம்



தாவரவியல் துறையின் கலாநிதி ஸ்ரீயாணி அவர்களால் முன்னெடுக்கப்படும் ஆராய்ச்சியினை வர்த்தகமயப்படுத்தல் அலங்கார ஒக்கிட் செயற்றிட்டத்தின் நோக்கம் ஆகும். வளர்ச்சிக்கு உதவும் எல்.ஈ.டீ வெளிச்சம் மற்றும் உள்ளக ஆவியாக்கலினைப் பயன்படுத்தி அலங்கார ஒக்கிட் தாவரங்களுக்கான வர்த்தக முன்மாதிரிகளை கட்டியெழுப்புதல் இச் செயற்றிட்டத்தின் இலக்காக அமைகின்றது. முன்மாதிரி பூரணப்படுத்தப்பட்டுவிட்டது. தற்போது நாம் உரிம ஒப்பந்தம் ஒன்றின் கீழ் உற்பத்திகளை உற்பத்திசெய்யவும் சந்தைப்படுத்தவும் எதிர்பார்த்துள்ளோம்.

(ஆ) புதுமையான உணவுப் படைப்புக்கள்

நாம் விவசாய மற்றும் பயிர்ச்செய்கை பொறியியல் துறையுடன் இணைந்த புத்தாக்க உணவு உற்பத்திகளை தயாரித்து வருகிறோம். அவை

(i) O - FRUTZ HAPPY MEAL (உயர் சத்துக்கொண்ட அனைத்து சத்துமிக்க காலை உணவு கப்)

இவ் உற்பத்தி உலர் பழங்கள் மற்றும் அவள் ஆகியவற்றின் கலவையாகும். இப் பழங்களின் அவற்றின் நிறம், சுவை, அமைப்பு மற்றும் சத்து என்பவற்றினைப் பாதுகாப்பதற்காக கட்டுப்பாட்டு நிலைமைகளின் கீழ் இப்பழங்கள் உலர்த்தப்பட்டன. பின்னர் பொருத்தமான அளவிலான உலர் பழத்துண்டுகள் மற்றும் அவள் ஆகியன ஒன்றாக கலக்கப்பட்டதுடன் இறுதி உற்பத்தி பொதியானது உணவு தர பொருட்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டது. அதன் பின்னர் ஊட்டச்சத்து மற்றும் காலாவதித் திகதி ஆகியன ஆராயப்பட்டன.





(ii) பலாப்பழ கொக்கிஸ்

தொழில் தொடர்பு நிலையம் பலாக்கொட்டைகளைப் பயன்படுத்தி கொக்கிஸினை உற்பத்திசெய்தது. மாதிரிப் பொருட்கள் உற்பத்திசெய்யப்பட்டதுடன் முதற்கட்ட சுவை நடவடிக்கைகள் முடிவடைந்து விட்டன. கருத்துக்கள் கிடைக்கப்பெற்றிருப்பதுடன் மேலதிக முன்னேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உற்பத்தியின் தர பகுப்பாய்வானது முடிவுபெற்றுள்ளது.





(3) களப் பயணங்கள்

தொழில்தொடர்பு நிலையம் இதன் வெளியீடுகளை அடைவதற்காக வாய்ப்புக்களை இனங்கண்டுகொள்வதற்காக பல்வேறு நிறுவனங்களையும் தனி நபர்களையும் தொடர்புகொண்டுள்ளது.

தொழில் தொடர்பு நிலையம் விவசாய சமூகத்துடன் தொடர்புடைய பிரச்சினைகளை விளங்கிக்கொள்ளும் நோக்கத்துடன் மெதிரிகிரிய மற்றும் அனுராதபுரத்தில் உள்ள இயற்கைவழி பயிர் அறுவடை கூட்டுறவுச் சமூகத்திற்கு களப் பயணம் ஒன்றினை ஒழுங்குசெய்திருந்ததுடன் உற்பத்தி மற்றும் விவசாய மற்றும் உணவுத் தொழிற்துறை அதிகரிக்க புதிய தீர்வுகளையும் முன்மொழிந்தது. Repellent Gun for Monkeys & Peacock இன் வணிகமயமாக்கக்கூடிய உற்பத்திகளையும் மேம்படுத்தியது. இந்த விஜயம் 2020 ஓகஸ்ட் 19 மற்றும் 20 ஆகிய திகதிகளில் இடம்பெற்றது.




(4) தொழில்நுட்ப போக்குகள் பற்றிய கருத்தரங்குகள்

(a) "செயற்கை நுண்ணறிவு" பற்றிய கருத்தரங்குகள்

இலத்திரனியல் மற்றும் கணினி பொறியியல் துறையின் கணினி ஆய்வுகூடத்தில் ஜனவரி 04, 2020 அன்று மு.ப.8.30 – பி.ப. 4.30 வரை கருத்தரங்கு இடம்பெற்றது. இலத்திரனியல் மற்றும் கணினி பொறியியல் துறையுடன் இணைந்து தொழில் வழிகாட்டல் அலகினால் இது ஒழுங்குசெய்யப்பட்டது. திரு.தர்ஷான அபேரத்தின பேச்சாளராக கலந்துகொண்டார். நோர்வேயில் அமைந்துள்ள எச்டர் பல்கலைக்கழகத்தில் தத்துவவியல் கலாநிதி பட்டத்தில் இரண்டாம் ஆண்டில் பயில்பவரும் செயற்கை நுண்ணறிவு ஆராய்ச்சி நிலையப் பல்கலைக்கழகத்தின் உறுப்பினராகவும் இருக்கின்ற ஒருவர் இதன் வளவாளராக கலந்துகொண்டிருந்தார்.





(b) "Intellectual Property Rights" பற்றியதான கருத்தரங்கு

"Intellectual Property Rights" பற்றியதான கருத்தரங்கு வேலைப்பட்டறையானது 29 செப்ரெம்பர் 2020 அன்று பி.ப.1.00 முதல் பி.ப. 4.00 வரை பொறியியல் பீட சபா மண்டபத்தில் இடம்பெற்றது. தொழில் தொடர்பு நிலையத்தினால் இது ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பல்கலைக்கழக வணிக இணைப்பு முகாமையாளர் திரிஷான் பெரேரா பேச்சாளராகக் கலந்துகொண்டார். எமது Intellectual Property இனை எவ்வாறு பாதுகாத்துக்கொள்வது பற்றியதான எண்ணக்கருத்து ஒன்றினை வழங்கியிருந்தார்.

(5) கட்டட புனருத்தான நிலையம் மற்றும் உபகரணங்களை கொள்வனவுசெய்தல்

கொழும்பு பிராந்திய நிலைய கட்டடத்திற்கு அருகில் முன்னர் சுகாதார விஞ்ஞானங்கள் துறையினால் பயன்படுத்தப்பட்டு தற்போது பயன்படுத்தப்படாமல் இருக்கும் கட்டடத்தின் சில அறைகளை தொழில் தொடர்பு நிலையத்தின் பணிப்பாளர் அடையாளம் கண்டுள்ளார். புனருத்தாரண வேலைகளுக்காகவும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காகவும் எஹெட் செயற்றிட்டம் மூலம் நிதி ஒதிக்கப்பட்டுள்ளது. உயர் தர உபகரணங்களுடன் இந்த நிலையம் வசதிப்படுத்தப்படும்.

எஹெட் செயற்றிட்டத்தில் இருந்து ரூ.10 மில்லியன் பெறுமதியான நிதி பெறப்பட்டதுடன் அது புத்தாக்க நிலையத்தின் அபிவிருத்திக்காக பயன்படுத்தப்படும். முழுமையாக நிறுவப்பட்டதும் நிலையத்தின் வருடாந்த வருமானம் ரூ.1 மில்லியனாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. முதற்கட்டமாக ரூ.4.மில்லியன் நிதி பெறப்பட்டதுடன் ப்ளொக் 34 கட்டடம் நிலையத்திற்காக தெரிவுசெய்யப்பட்டு லேசர் கட்டர், 3D பிறிண்டர்கள் மற்றும் ஏனைய தேவையான உபகரணங்கள் போன்ற உபகரணங்கள் நிலையத்திற்காக கொள்வனவு செய்யப்படும்.

(6) குறுகிய கால கற்கை நெறிகள்

கொழும்பு பிராந்திய பிராந்திய நிலையத்தின் கீழ் ‘‘தொழில்நுட்ப முயற்சியாண்மையாளர்களுக்கான அன்றொயிட் அப்பிளிக்கேஷன் வடிவமைப்பு’’ பற்றியதான குறுகிய கால கற்கை நெறியானது தொழில் தொடர்பு நிலையத்தினால் நடத்தப்பட்டது.

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் தொழில் தொடர்பு நிலையத்தினால் கொழும்பு பிராந்திய நிலையத்தின் கீழ் OUSL SLASSCOM Industry Bootcamp நடத்தப்பட்டு வருகின்றது

(7) பசுமை செயற்றிட்டங்கள்

பின்வரும் செயற்றிட்டங்களுக்கான இணைந்த ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்காக ஹீல் லங்கா பிறைவேற் லிமிற்றட் இன் முகாமைத்துவப் பணிப்பாளர் திரு. சரத் பெர்ணான்டோ உடன் தொழில் தொடர்பு நிலையம் கடமையாற்றுகிறது.

1. பசுந் தீவனத்திற்கான பசுமைத் தீவனம்
2. பலாப்பலத்தினை அடிப்படையாகக்கொண்ட பசுந் தீவனம்
   தொழில் தொடர்பு நிலையத்துடன் இணைந்து இந்த ஆராய்ச்சியினை விவசாய மற்றும் பயிரிடல் பொறியியல் துறை முன்னெடுத்து வருகிறது.
3. சுண்ணாம்புக் கூழ்
4. முழுமையாக தானியக்கப்பட்ட செங்குத்தான பூந்தொட்டி



5. தானியக்கப்பட்ட பசுமை இல்லம்
6. இளநீரினைப் பயன்படுத்தி வினிகரைப் உற்பத்திசெய்தல்
7. தானியக்கப்பட்ட காளான் வளர்ப்புப் பெட்டி
8. தேன் பிரித்தெடுக்கும் பெட்டி
9. நுளம்பு இனங்காணுகைப் பெட்டி

6.9 கல்விசார் தொழில்நுட்பம் மற்றும் ஊடக நிலையம்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினை பாரம்பரிய பல்கலைக்கழகத்திலிருந்து திறந்த மற்றும் தொலைக்கல்வி பல்கலைக்கழகமாக கௌரவப்படுத்தும் முக்கிய அம்சங்களில் ஒன்றாக கல்விசார் தொழில்நுட்ப பிரிவினை நிறுவியமையானது (தற்போது கல்வி தொழில்நுட்பம் மற்றும் ஊடக நிலையம்) அமைகின்றது. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் அனைத்து கற்கை நிகழ்ச்சித்திட்டங்களினதும் தரமான தரநிலையை பேணுவதில் இது முக்கியபங்கு வகிக்கின்றது. தரநிர்ணய வழிகாட்டல்களை உருவாக்குதல், கல்வி மூலங்களை (அச்சிடப்பட்ட, ஒலி-ஒளி மற்றும் நிகழ்நிலை) வடிவமைத்தல் மற்றும் விருத்திசெய்தல் என்பவற்றில் கல்வியாளர்களின் ஆளுமையினை விருத்திசெய்தல் மற்றும் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பரந்துபட்ட மாணவர்களிற்கான உயர்தரமான கற்றல் மூலங்களை விருத்திசெய்வதற்கும் இது பொறுப்பானதாக அமைகின்றது. நிகழ்நிலை கற்கைநெறிகள் உள்ளடங்களாக அவர்களது கற்றல் வளங்களை வடிவமைப்பதற்கு ஆறு பீடங்களுக்கும் இரு தற்போது உதவுகின்றது.

பாரம்பரிய பல்கலைக்கழகங்களில் வழங்கப்படும் நேருக்குநேருக்கான அறிவுறுத்தல்கள் போலல்லாது தொலைவில் இருந்துகற்கும் மாணவர்களுக்கு கிடைக்கக்கூடிய பிரதான கற்பித்தல் சாதனமாக இந்த அறிவுறுத்தல் வளங்கள் அமைகின்றன. கல்விசார் தொழில்நுட்பவியலின் முக்கியத்துவத்தினை கருத்தில்கொண்டு 1980ஆம் ஆண்டு இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் ஒலி-ஒளி அலகு நிறுவப்பட்டு 1987ஆம் ஆண்டின் கட்டளைச் சட்டத்தின் கீழ் கல்விசார் அலகொன்றாக 1988 ஆம் ஆண்டில் கல்விசார் தொழில்நுட்பபிரிவாக (உரு -1) மாற்றமடைந்தது.



உரு1 :திரு லால் குணவர்த்தன ஒலி-ஒளி அலகின் முதலாவது ஒலி-ஒளி தொழில்நுட்ப அலுவலராக கடமையாற்றினார்.

இது 1993 இல் ஜப்பான் சர்வதேச கூட்டுறவு முகவர் (யைக்கா) இன் நிதி உதவியுடன், கலைபடப்பிடிப்புக் கூடக் கட்டடத்தொகுதிக் கட்டடத்துடன் மேலும் வலுவடைந்தது. (உரு 2a & b).



உரு2a: கட்டுப்பாட்டு அறை





உரு 2b: 1993 யைக்கா உதவியுடனான கலைபடப்பிடிப்புக் கூடக் கட்டடத்தொகுதிக் கட்டடத்துடன்கூடிய பிரதான படப்பிடிப்புக் கூடம்

கல்வி தொழில்நுட்பம் மற்றும் ஊடக நிலையத்தின் படைப்பு அலகின் படப்பிடிப்பு கூடம் மேலும் மேம்படுத்தப்பட்டு, எண்மயப்படுத்தப்பட்டு தொலைக்கல்வி நவீனமயமாக்கல் செயற்றிட்டத்தின் (DEMP – 2003 - 2009) திறன் மேம்பாட்டு செயற்றிட்டத்தின்(OUSL-CE) கீழ் எச்.டீ. தொலைக்காட்சி படப்பிடிப்புக் கூடத்திற்கு மாற்றமடைந்தது. உரு 3a மற்றும் 3b. உயர்தர கல்விசார் ஒலி-ஒளி மூலங்களை படைப்பதன் மூலம் இது கல்விசார் பணியாளர்களுக்கு உதவியளிக்கின்றது.







உரு 3a: 1993 இல் படப்பிடிப்புக் கூடக் கட்டடத் தொகுதியின் கட்டுப்பாட்டு அறை

உரு 3b: இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் திறன் மேம்பாட்டு செயற்றிட்டத்தில் இருந்துபெற்றுக்கொண்ட உதவியுடன் உபகரணங்களை எண்ணியல்மயப்படுத்தியதன் பின்னர் கட்டுப்பாட்டுஅறை

1994 ஆம் ஆண்டு ஆராய்ச்சி அறையின் நிறுவுகையுடன் திறந்த தொலைக்கல்வி பல்கலைக்கழகமாக திறந்த தொலைக்கல்வி ஆராய்ச்சிகளின் முக்கியத்துவத்தினை அடையாளங்கான வழி சமைத்தது. 1996ஆம் ஆண்டில் பிரிவிற்கு கல்விசார் பணியாளர்களை உள்ளீர்ப்புசெய்ததுடன் இந்த முன்னெடுப்பானது மேலும் வலுவடைந்ததுடன் திறந்த தொலைக்கல்வி ஆராய்ச்சிகளை முன்னெடுப்பதற்கான கலாசாராம் படிப்படியாக இனங்காணப்பட்டதுடன் அவை இலங்கை திறந்த பல்கலைக்கழக சமூகத்திற்குள் வேகமாக அதிகரித்தது.

புதிய தொழில்நுட்ப அபிவிருத்திகளுக்கு இடமளிப்பதற்காக 2011 இல் பரீட்சை திணைக்களத்தில் பிரதானமான கட்டமைப்பு மாற்றங்கள் இடம்பெற்றதுடன் கல்விசார் தொழில்நுட்ப மற்றும் ஊடக நிலையம், இரண்டு பிரிவுகளாக மீள் கட்டமைக்கப்பட்டது ; கல்விசார் மற்றும் ஆராய்ச்சி அலகு மற்றும் படைப்பு அலகு

கல்விசார் மற்றும் ஆராய்ச்சி அலகு

